
# இயல் 7.5 வடிவியல்

பயிற்சி எண் :: 7.5.2.1.B

வடிவியல் (Geometry) - நேரிய கோண இணைகள் - தநாஅபு - பயிற்சி 5.1.5-7

## வடிவியல் (Geometry) - நேரிய கோண இணைகள் - தநாஅபு - பயிற்சி 5.1.5-7

5. நேரிய கோண இணைகளில் ஒரு கோணம் செங்கோணம் எனில் மற்றொரு கோணத்தைக் குறித்து என்ன கூற இயலும்?





நேரிய கோண இணைகளின் கூட்டுத்தொகை 180° என்பதால் ஒரு கோணம் 90° எனில் மற்றொன்றும் 90° - ஆகத்தான் இருக்க வேண்டும்.

$$90^\circ + x^\circ = 180^\circ$$

$$x^\circ = 180^\circ - 90^\circ = 90^\circ$$

எனவே, ஒரு கோணம் 90° எனில் மற்றொன்றும் 90° ஆகும்.

6. ஒரு புள்ளியில் அமையும் மூன்று கோணங்கள் 1:4:7 என்ற விகிதத்தில் உள்ளன எனில் ஒவ்வொரு கோணத்தின் மதிப்பையும் காண்க.




ஒரு புள்ளியில் அமையும் கோணங்களின் கூடுதல் 360° ஆகும்.கண்டுபிடிக்க வேண்டிய கோணங்களை $x^\circ$, $4x^\circ$, $7x^\circ$ எனக் கொள்க.

$$x^\circ + 4x^\circ + 7x^\circ = 360^\circ$$

$$12x^\circ = 360^\circ$$


$$x^\circ = \frac{360^\circ}{12} = 30^\circ$$

$$1x:4x:7x = 1 \times 30^\circ:4 \times 30^\circ:7 \times 30^\circ$$

$$= 30^\circ:120^\circ:210^\circ$$

ஒரு புள்ளியில் அமையும் மூன்று கோணங்கள் 1:4:7 என்ற விகிதத்தில் உள்ளன எனில் அக்கோணங்களின் மதிப்பு 30°:120°:210° ஆகும்.

7. ஒரு புள்ளியில் ஆறு கோணங்கள் அமைந்துள்ளன. அவற்றில் ஒரு கோணம் 45°. மற்ற ஐந்து கோணங்களும் சம அளவுள்ளவை எனில் அந்த ஐந்து கோணங்களின் அளவை காண்க.




ஒரு புள்ளியில் அமையும் கோணங்களின் கூடுதல் 360° ஆகும். கண்டுபிடிக்க வேண்டிய கோணத்தை $x^\circ$ எனக் கொள்க.

$$5x^\circ + 45 = 360^\circ$$

$$5x^\circ = 360^\circ - 45^\circ = 315^\circ$$

$$x^\circ = \frac{\overset{63}{\cancel{315}}}{\underset{1}{\cancel{5}}} = 63^\circ$$

5 கோணங்களின் அளவு 63° ஆகும்.

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/x-Lwjy3WOLA

## Information Rights & Disclaimers


Sum & solution prepared on Monday 3rd October, 2022 :: 17:01 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.